மணிச்சுடர் 26/27.3.2012

# திருச்சி ஜமால் முஹம்மது கல்லூரி தாளாளருக்கு சிங்கப்பூரில் பாராட்டு

சிங்கப்பூர், மார்ச் 26–

திருச்சி ஜமால் முஹம்மது கல்லூரி 1951 ஆம் ஆண்டு நிறுவப்பட்டு 61 ஆண்டுகள் உயர்கல்விச் சேவையை வழங்கி வருகிறது. தன்னாட்சி மற்றும் பாரதிதாசன் பல்கலைக்கழகத்தின் அங்கிகாரம் பெற்ற இக்கல்லூரி, சென்ற ஆண்டு "ஆற்றல் வளத் தனித்தகுதி" (COLLEGE WITH POTENTIAL FOR EXCELLENCE) சான்றிதழ் பெற்று வரலாற்றுச் சாதனைப் படைத்திருக்கிறது.

பல்வேறுபட்ட இளங்கலை, முதுகலை மற்றும் உயர்கல்வி ஆராய்ச்சி பட்டப்படிப்புகளை வழங்கி வரும் இக்கல்லூரியில், சுமார் 11,000 மாணவ மாணவிகள் பயின்று வருகின்றனர்.

ஜமால் முஹம்மது கல்லூரி நிர்வாகக்குழு செயலரும் தாலாளருமாகிய ஏ. கே. காஜா நஜீமுதீன் சாஹிப் அவர்களின் அயராத 25 ஆண்டு கால உயர்கல்விச் சேவையையும் சாதனைகளையும் பாராட்டும் வண்ணம், சிங்கப்பூரில் இக்கல்லூரியின் முன்னாள் மாணவர்கள் சங்கம் சென்ற ஞாயிற்றுக்கிழமை 25–03–2012 அன்று பொன்னாடைப் போர்த்தி கௌரவம் செய்தது.

இவ்விழாவில், இக்கல்லூரியின் நிர்வாகத் துறை பேராசிரியர் முஹம்மது பாஜில், சிங்கப்பூர் கடையநல்லூர் முஸ்லிம் லீக் சங்கத்தின் தலைவர் நசீர் கனி, எழுத்தாளர் ஷாநவாஸ் அப்துல் காதர் மற்றும் சங்கத்தின் நிர்வாக குழு உறுப்பினர்களும், முன்னாள் மாணவர்களும் கலந்து சிறப்பித்தனர்.

கல்வி சார்ந்த சமூகநலப் பணிகள் செய்வதை தன் பிரதான நோக்கமாகக் கொண்டு செயல்பட்டு வரும் ஜமால் முஹம்மது கல்லூரி முன்னாள் மாணவர்கள் சங்கம் (சிங்கப்பூர் கிளை), எதிர்வரும் 22–04–2012 அன்று சிங்கப்பூரில் "தொழில் முனைப்பு இலவச கருத்தரங்கு" ஒன்றை ஏற்பாடு செய்திருக்கிறது. இக்கருத்தரங்கு பற்றிய மேல் விவரங்களை, இணையத்தில் www.jmcalumni.org.sg என்ற முகவரியில் காணலாம்.

மேற்கண்ட தகவலை சங்கத் தலைவர் முஹிய்யத்தீன் அப்துல் காதர் தெரிவித் துள்ளார்.



திருச்சி ஜமால் முஹம்மது கல்லூரி தாளாலர் ஏ. கே. காஜா நஜீமுதீன் சாஹிப்புக்கு, சிங்கப்பூர் முன்னாள் மாணவர் சங்கத்தின் உறுப்பினர்கள் பொன்னாடை போர்த்தி கௌரவம் செய்கின்றனர்.